
# சிவகங்கை முழக்கமும் சென்னையில் விளக்கமும்



தலைவர் கலைஞர்

# சிவகங்கை முழக்கமும் சென்னையில் விளக்கமும்

தலைவர் கலைஞர்

-: தலைமைக் கழக வெளியீடு :-

திராவிட முன்னேற்றக் கழகம்

அண்ணா அறிவாலயம்,

சென்னை - 600 018.

முதற் பதிப்பு: 27 பிப். 2000

விலை: ரூ. 5

அச்சிட்டோர்: சில்வர் ஸ்ட்ரீக்,
174, பீட்டர்ஸ் சாலை,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.

இந்நூல்...

தலைவர் கலைஞர் அவர்கள்
22-2-2000 அன்று சிவகங்கையில்
பேரறிஞர் அண்ணா அவர்களின்
திருவுருவச் சிலையைத் திறந்து வைத்தும்,
26-2-2000 அன்று சென்னையில்
அனைத்துக் கட்சிக் கூட்டத்திலும் ஆற்றிய
பேருரையை நூல் வடிவில் தலைமைக்
கழகம் பெருமையோடு வெளியிடுகிறது.

என். செல்வேந்திரன்,
கழக வெளியீட்டுச் செயலாளர்,
தி.மு.க.

‘‘தமிழ்மொழியிலே ஆரம்பக் கல்வியைப் பயில்வதில் என்ன தவறு? தாய்மொழியிலே படிக்காதே என்று சொல்வதைவிட வெட்கங்கெட்ட அல்லது மக்களை குழப்புகின்ற ஒரு வாதம் இருக்கமுடியும் என்று நீங்கள் கருதுகிறீர்களா?’’ என பிப்ரவரி 22ஆம் தேதி சிவகங்கையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்து உரையாற்றிய முதல்வர் கலைஞர் அவர்கள் ஆவேசத்தோடு குறிப்பிட்டார்.

சிவகங்கையில் நீதிக்கட்சி முன்னோடி சிவகங்கை இராமச்சந்திரனார் சிலைக்கு மாலை அணிவித்தும், இராமச் சந்திரன் அவர்களின் புதல்வரும் சிவகங்கை நகர தி.மு.க.வின் முதல் செயலாளருமான எஸ்.ஆர். தியாகராஜன் படத்தைத் திறந்து வைத்தும், மறைந்த ஆண்டியப்ப தேவர் எழுதிய ‘அகமுடையோர் வரலாறு’ எனும் நூலை வெளியிட்டும் – பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலையை திறந்துவைத்தும் முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு.

இன்று நம்முடைய அன்பிற்குரிய தம்பி பசும்பொன் தா.கிருட்டினன் அவர்களின் முயற்சியாலும் இந்த மாவட்டத்திலுள்ள கழகப் பெருமக்கள், கழக மாமணிகள், முன்னோடிகள் ஆகியோருடைய ஒத்துழைப்போடும் பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலை திறப்பு விழாவும் அதைத் தொடர்ந்து சிவகங்கை இராமச்சந்திரனார் அவர்களின் சிலைக்கு மாலை அணிவிக்கும் நிகழ்ச்சியும் அதனைத் தொடர்ந்து ஆண்டியப்பத் தேவர் எழுதியுள்ள ‘அகமுடையோர் வரலாறு’ நூல் வெளியீட்டு விழாவும் மிகச் சிறப்பாக இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திக்கின்ற நல்ல வாய்ப்பினைப் பெற்றமைக்காக நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

பொது நிகழ்ச்சி என்கின்ற அளவில் சில மாதங்களுக்கு முன்பு தேர்தல் பிரச்சாரத்திற்கு நான் இங்கு வந்தபோது உங்களை யெல்லாம் சந்தித்து வேண்டுகோள் விடுத்திருந்தேன். ஆனால் என்னுடைய வேண்டுகோள் எந்த அளவிற்கு வெற்றிபெற்றது என்பது உங்களுக்கும் தெரியும். எனக்கும் தெரியும். எனவே நான் தேர்தலுக்காக இப்பொழுது வேண்டுகோள் விடுக்க வரவில்லை. விடுக்கின்ற வேண்டுகோள் தமிழ்ச் சமுதாயத்தை ஒற்றுமையோடு கட்டிக் காக்க வேண்டும். அதற்காக நாமெல்லாம் ஒன்று சேருவோம் என்கின்ற வேண்டு கோள் விடுப்பதற்காகத்தான் நான் இப்பொழுது உங்கள் முன்னால் நின்றுகொண்டிருக்கின்றேன்.

முதலில் அகமுடையோர் வரலாறு பற்றி ஒரு சில செய்திகளை சொல்ல விரும்புகிறேன். ஆண்டியப்பத் தேவர் இந்த நூலை எழுதியுள்ளார். அவர் 1991– ஆம் ஆண்டு கழக ஆட்சி கலைக்கப் படுவதற்கு சில நாட்களுக்கு முன்பு சென்னையில் அவருக்கு வழங்கப்பட்ட தமிழறிஞர் விருது– உதவித் தொகையை பெற்றுக் கொள்ள வந்திருந்தார்கள். அந்த நிகழ்ச்சியிலே நான் அவரை சந்தித்து வாழ்த்துக் கூறி அவருக்குரிய பரிசுகளையும் வழங்கினேன். அத்தகைய ஒரு நல்ல தமிழறிஞர், வரலாற்றை ஆய்வு செய்து எழுதக்கூடிய ஆற்றலாளர் இன்றைக்கு இல்லை யென்றாலும்கூட அவர் புதையல் போல் தந்த இந்தப் புத்தகம் நம்முடைய கைகளிலே தவழ்ந்து கொண்டிருக்கிறது. அவர் அந்த நூலின் மூலமாக என்ன சொல்ல வருகிறார் என்றால், பொழிப்புரையாக காணும்பொழுது எத்தனை பிரிவு மக்கள் இருந்தாலும் கூட எல்லோரும் ஒரேகுலம்தான், எல்லோரும் தமிழர்கள்தான் என்கின்ற ஒரு மையக் கருத்தை அந்த நூலின் மூலமாக உலவவிட்டிருக்கின் றார்.

அந்த நூலை இன்றைக்கு வெளியிட்ட நேரத்தில் எனக்கு மேலும் சில நினைவுகள். நம்முடைய

நகைமுகன்–இன்றைக்கு எனக்கு நகைமுகன் இடைக்காலத்திலே கொஞ்சம் பகைமுகனாக இருந்தார் என்பது, நண்பர்களைக் கேட்ட பொழுது அவரது பூர்வீகத்தைப் பற்றி சொன்னார்கள். சிவகங்கை இராமச்சந்திரனார் திராவிட இயக்கத்தில் ஒரு தூணாக விளங்கியவர். நாமெல்லாம் பிறப்பதற்கு முன்பே நாமெல்லாம் பொது வாழ்க்கையிலே குதிப்பதற்கு முன்பே பொது வாழ்க்கையில் குதித்து திராவிட இயக்கத்திற்காக தென்றலாக, புயலாக வீசியவர் சிவகங்கை இராமச்சந்திரனார் அவர்கள். அவருடைய அருமை மகன் இராம.சுப்பிரமணியம். எனக்கு ஒரு பெருமை. இராம.சுப்பிரமணியத்தை அரசு தேர்வாணைக் குழுத் தலைவராக 1971ஆம் ஆண்டு நான்தான் நியமித்தேன் என்ற அந்த நிகழ்ச்சி எனக்குப் பெருமை சேர்க்கின்ற ஒரு நிகழ்ச்சியாகும்.

அவருடைய சகோதரர் எஸ்.ஆர்.தியாகராசன் (நகைமுகனின் தந்தை) சிவகங்கை பகுதியிலே தி.மு.கழகத்தின் செயலாளராக 1952ஆம் ஆண்டிலே பொறுப்பேற்றிருக்கிறார். 1949இல் தி.மு.கழகம் பிறந்த காலத்திலிருந்து இந்தப் பகுதி யினுடைய கிளைச் செயலாளராக அவர் பொறுப்பேற்று கழகத்தை இங்கே நடத்தி வந்திருக்கின்றார்.

இங்கே நகைமுகன் என்னிடத்திலே ஒரு இரசீதை கொடுத்தார். அந்த இரசீதில் இருப்பது எஸ்.ஆர்.தியாகராசன் கையெழுத்து; அவர் தி.மு.கழகத்தின் செயலாளர் இராமச்சந்திரனாருடைய மகன் எஸ்.ஆர்.தியாகராசன் கையெழுத்திட்டு அரசினிப்பட்டி ஏ.வேலுச்சாமி என்பவரை 4.3.52 அன்று எட்டணா உறுப்பினராக சேர்த்திருக்கிறார். உறுப்பினர் எண்–11929. அந்த அரசினிப் பட்டி வேலுச்சாமி யாரென்றால் ஒரு ஆதிதிராவிட சகோதரர். அவரை இராமச்சந்திரனார் மகன் திராவிட முன்னேற்றக் கழகத்திலே அன்றைக்கு சேர்த்தார்

என்பது வெறும் வரலாறு மாத்திரமல்ல. எதிர்காலத்திலே இப்படி ஒருவரையொருவர் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுகின்ற ஒரு அறிவுரையுமாகும் என்பதை நான் இங்கே சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படி சில நினைவுகளை நம்முடைய உள்ளத்திலே எழுப்புகின்ற விதமாக இராமச்சந்திரனார் சிலைக்கு மாலை அணிவிக்கிற நிகழ்ச்சியும் புத்தகம் வெளியிடுகின்ற நிகழ்ச்சியும் அமைத்திருப்பதற்காக நான் உள்ளப்டியே அவர்களையெல்லாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இங்கே அறிஞர் அண்ணா அவர்களின் சிலை திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. இந்த திறப்பு விழாவையொட்டி நம்முடைய கழக முன்னோடிகள், அமைச்சர் பெருமக்கள் அரியதோர் விளக்கவுரையை ஆற்றியிருக்கின்றார்கள்.

அண்ணா, தந்தை பெரியார் அவர்களால் உருவாக்கப் பட்டவர். பொது வாழ்க்கையில் அடியெடுத்து வைக்கலாமா அல்லது படித்து பட்டம் பெற்று சொந்த வாழ்க்கையை கவனிக்கலாமா என்கின்ற இரு நிலையில் ஊசலாடிக் கொண்டிருந்த பொழுது திருப்பூரில் நடைபெற்ற ஒரு மாநாட்டில் தந்தை பெரியாரை சந்திக்கின்ற ஒரு வாய்ப்பு ஏற்பட்டு அண்ணா அவர்களுடைய பேச்சாற்றலையும் கருத்துச் செறிவையும் நேரிலேயே கண்ட பெரியார் அவர்கள், அண்ணா அவர்களை தன்னோடு இருக்குமாறு கேட்டுக்கொண்டு, அன்றைக்கு தந்தை பெரியாருடைய நிழலில் பெரியாருடைய கொள்கைகளை, பெரியார் என்ன எண்ணுகிறாரோ அந்த எண்ணங்களை தமிழகத்திலே விதைக்கின்ற பணியிலே தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆவார்கள்.

அண்ணா அவர்கள் பெரியாரிடத்திலே மன வேறுபாடு கொண்டு வெளியேற நேர்ந்தபொழுதுகூட, தி.மு.கழகத்தை தொடங்கியபோதுகூட பெரியார் தன்னுடைய தலைவர்

என்கின்ற அந்த கருத்திலிருந்து மாறுபடவில்லை. பெரியாரை பழித்துப் பேசியதில்லை. தன்னுடைய தலைவரை கடைசிவரை போற்றியேதான், பாராட்டியேதான், வாழ்த்தியேதான் வாழ்ந்து மறைந்தார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

சிறு சம்பவம், அதன் காரணமாக ஒரு பெரிய பிளவு திராவிடர் கழகத்திலே ஏற்பட்டு தி.மு.கழகம் உதயமாகி, அப்படி உதயமான கழகம் தேர்தலிலே போட்டியிட்டு அரசுரிமை பெற்றார். ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தார். பெரியார் சமுதாயத் துறையிலே என்னென்ன கருத்துக்களை அள்ளி வைக்கிறாரோ அவைகளையெல்லாம் செயல் படுத்தலாம் என்பதற்காகத்தான் 1956–ம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற மாநில மாநாட்டில் அண்ணா அவர்கள் அங்கே குழுமியிருந்த கழகத் தோழர்களையும், பொதுமக்களையும் பார்த்து "நீங்கள் தி.மு.கழகம் தொடர்ந்து சமுதாயத் தொண்டே ஆற்ற வேண்டுமென்று கருதுகிறீர்களா? அல்லது அரசியலில் ஈடுபட தேர்தலில் நிற்கலாம் என்று கருதுகிறீர்களா? தேர்தலில் நிற்கலாம் என்று கருதுகிறவர்கள் – வேண்டாமென்று கருதுகிறவர்கள் கருத்துக்களை தெரிவிக்கலாம்" என்று கூறி அதற்காக வாக்குச் சீட்டுக்களை தயாரித்து வாக்குப் பெட்டிகளையும் பந்தலிலேயே வைத்து அப்படி வாக்களித்ததிலே மிகப் பெரும்பான்மையோர் தி.மு.கழகம் தேர்தலில் நிற்க வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்திய காரணத்தால் அண்ணா அவர்கள், தி.மு.க. இனி தேர்தலிலே நிற்கும் எனக் கூறி 1957–ம் ஆண்டு தேர்தலிலே ஈடுபட்டார்கள். 15 இடங்களை 57–ம் ஆண்டு தேர்தலிலே பெற்றோம். அண்ணா அவர்கள் தலைமையிலே நானும் பேராசிரியரும் மற்றும் சிலரும் சட்டப் பேரவைக்குச் சென்றோம்.

பிறகு, 1962 தேர்தலில் 50 இடங்களைப் பெற்றோம். 1967 தேர்தலில் அண்ணா அவர்கள் முதலமைச்சர் என்ற அளவிற்கு ஆட்சிப் பொறுப்பை ஏற்றோம். ஆட்சிப்

பொறுப்பை ஏற்ற காரணத்தால்தான், இங்கே எடுத்துச் சொல்லப்பட்டதே சுய மரியாதை திருமணத்தை சட்டப்படி செல்லுபடியாக ஆக்க முடிந்தது. ஆட்சிப் பொறுப்பை ஏற்ற காரணத்தால்தான் இங்கே கூறப்பட்டதைப்போல, இரு மொழிக் கொள்கை; இந்திக்கு, இந்தி ஆதிக்கத்திற்கு இனிமேல் தமிழகத்தில் இடமில்லை. தமிழ் ஆங்கிலம் இரண்டு மொழிகள்தான் என்கின்ற இரு மொழிக்கொள்கை அப்பொழுது வகுக்கப்பட்டது.

இங்கே ஆட்சிப் பொறுப்பை ஏற்ற காரணத்தால்தான் நீண்ட காலமாக பெரியார், அண்ணா மற்றும் பல தலைவர்கள் ஏன் அதற்காகவே உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த விருதுநகர் சங்கரலிங்க நாடார் இவர்களெல்லாம் கேட்டுக் கொண்ட சென்னை ராஜ்ஜியத்திற்கு 'தமிழ்நாடு' என்று பெயர் வைக்கவேண்டும் என்கிற அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டது.

எனவே ஆட்சிப் பொறுப்பிற்கு வருவதால் பல சமுதாய நலத்திட்டங்களை, சமுதாய சீர்திருத்த சட்டங்களை நிறைவேற்ற முடியும் என்ற உண்மையை நாம் உணர முடிந்தது. இன்னும் சொல்லப்போனால் இதே சிவகங்கை இராமச்சந்திரனார் கலந்துகொண்ட மாநாடுதான் 1929 ஆம் ஆண்டு செங்கல் பட்டில் நடைபெற்ற சுயமரியாதை மாநாடு. அந்த மாநாட்டில் டபிள்யு.பி.ஏ.சவுந்திரபாண்டியனார், பி.டி.ராஜன் இவர்களெல்லாம் கலந்துகொண்டார்கள். அந்த மாநாட்டில் சிவகங்கை இராமச்சந்திரனார் அவர்களும் கலந்து கொண்டார்கள்.

அந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்தான் பெண்களுக்கு சொத்தில் சம உரிமை தரப்பட வேண்டும். பெற்றோர்களின் சொத்தில் ஆண்களைப் போலவே பெண் களுக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் 1929 ஆம் ஆண்டு செங்கல்பட்டு சுயமரியாதை

மாநாட்டில் பெரியார் முன்னிலையில், நம்முடைய இராமச்சந்திரனார் போன்றோர் முன்னிலையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம். அது எப்போது சட்டமாயிற்று தெரியுமா ?

1929 ஆம் ஆண்டிற்குப் பிறகு எத்தனையோ ஆட்சிகள் வந்தன – போயின. காங்கிரஸ் ஆட்சி 20 ஆண்டுகாலமிருந்தது. அந்தத் தீர்மானம் அப்பொழுதெல்லாம் கிடப்பிலேதான் கிடந்தது. 1989 ஆம் ஆண்டு நான் மூன்றாவது முறையாக தமிழகத்தின் முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகுதான் 1929 ஆம் ஆண்டு செங்கல்பட்டு மாநாட்டு தீர்மானத்தை சட்டமாக ஆக்க வேண்டுமென்று இனிமேல் பெண்களுக்கும் அவர்களுடைய பெற்றோர் சொத்தில் சம உரிமை உண்டு என்ற சட்டத்தை வடித்தெடுத்து அதை நான் நிறைவேற்றினேன் என்றால் 60 ஆண்டுகளுக்குப் பிறகு சுயமரியாதை இயக்கத்தினுடைய கொள்கை சட்டமாக ஆக்கப்பட்டது, தி.மு.கழகம் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த காரணத்தால். இத்தகைய நல்ல விளைவுகளை நாம் அரசியலில் நுழைந்த காரணத்தால் ஏற்படுத்த முடிந்தது.

அறிஞர் அண்ணா அவர்கள் எங்களையெல்லாம் அவ்வாறுதான் பழக்கினார்கள். அவர் முதலமைச்சராக பொறுப்பேற்ற காலகட்டத்தில் ஒரு முறை நிதிநிலை அறிக்கையிலே பேசும்பொழுது சொன்னார். "தமிழகத்தில் உள்ள ஏழை எளிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், நடுத்தர மக்கள், நலிவுற்ற மக்கள் இவர்களுடைய வாழ்க்கையை எல்லாம் மையமாக வைத்துத்தான் இந்த ஆட்சிச் சக்கரம் சுழலும்" என்று குறிப்பிட்டார். அதை நான் கனவிலும் மறக்கவில்லை. அந்த வாசகத்தை மறக்காத காரணத்தால்தான் இன்றைக்கும் ஏழை எளியவர்களுக்கு, பாடுபடுகின்ற தொழிலாளிகளுக்கு, பாட்டாளி மக்களுக்கு, பிற்படுத்தப் பட்ட மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, மிகவும்

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, நலிந்த பிரிவு மக்களுக்கு எதையாவது செய்ய வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருக்கிறேன் – செய்து கொண்டேயிருக்கிறேன்.

அண்ணா அவர்களுடைய திறமை, வாதத்தின் வலிவு இவைகளையெல்லாம் அவர் சட்டமன்றத்திலே முதலமைச்சர் பொறுப்பை ஏற்பதற்கு முன்பே பாராளுமன்றத்திலே, மாநிலங்களவையிலே உறுப்பினராக பொறுப்பேற்று ஆற்றிய உரையை பண்டித நேரு வியந்து போற்றினார். அங்கேதான் அண்ணா சொன்னார். நான் எங்கிருந்தோ பெரிய இடத்திலிருந்து வந்துவிட்டவனல்ல. தமிழ்நாட்டு தெருக்களிலே உள்ள சாலையோர மக்களின் பிரதிநிதியாக இங்கே வந்திருக்கிறேன் என்று குறிப்பிட்டார். சாலையோரத்தின் பிரதிநிதி நான், அடித்தளத்து மக்களின் பிரதிநிதி நான் என்று அதை பெருமையாக குறிப்பிட்டார் அண்ணா. அதையேதான் தமிழக சட்டமன்றத்திலும் செயல்படுத்திக் காட்டினார். ஆட்சியிலும் செயல் படுத்திக் காட்டினார்.

அண்ணா அவர்கள் மொழிக்கொள்கையிலே என்ன கருத்துக் கொண்டிருந்தார் என்பதை இங்கே தமிழ்க்குடிமகன் மிக விளக்கமாக எடுத்துக் கூறினார். அண்ணா அவர்களின் பேச்சில் மயங்கிய காங்கிரஸ்காரர்கள் சட்டமன்றத்தில் தயங்கி தயங்கி கேள்வி கேட்க எழுவார்கள். ஒரே ஒரு காங்கிரஸ் நண்பர் இருந்தார். அவர்கூட சில ஆண்டுகளுக்குப் பிறகு என்னுடைய தலைமையை ஏற்று தி.மு.கழகத்திற்கு வந்துவிட்டார். அவரது பெயர் கே.விநாயகம். திருத்தணி போராட்ட வீரர்.

அவர் ஒரு நாள் எழுந்து இரண்டு முறை கேள்வி கேட்டார். அந்த இரண்டு முறையும் அண்ணா தந்த பதிலிருக்கிறதே அதுதான் சுவையான பதில். ''இந்தக் கருணாநிதி பேருந்துகளிலெல்லாம் 'யாகாவாராயினும் நாகாக்க' என்ற திருக்குறளை எழுதி

வைத்திருக்கிறாரே, அது யாருக்காக எழுதப்பட்ட குறள்?" என்று விநாயகம் கேட்டார். அண்ணா உடனே எழுந்து "யார் யாருக்கு நாக்கிருக்கிறதோ அவர்களுக்காக எழுதப்பட்ட குறள்" என்று சொன்னார்.

இன்னொரு முறை கோபத்திலே அதே விநாயகம் அண்ணா அவர்களைப் பார்த்து கோபமாக கூறினார்; **"your days are numbered "** அதாவது, உங்களுடைய ஆட்சியின் நாட்கள் எண்ணப்படுகின்றன என்று சொன்னார். உடனே அண்ணா எழுந்து **" My steps are measured "** என்னுடைய நாட்கள் எண்ணப்படுகின்றன. ஆனால் என்னுடைய அடிகள் அளந்து வைக்கப்படுகின்றன என்று சொன்னார்.

இப்படி அருமையான பதில்களை வைத்து அற்புதமான விளக்கங்களை தரக்கூடிய ஆற்றலாளர் அறிஞர் அண்ணா அவர்கள். அவர் தமிழ்ச்சமுதாயத்தின் எழுச்சிக்காக, தமிழ் சமுதாயம் ஒற்றுமையோடு வாழ வேண்டும் என்பதற்காக பல்வேறு சாதிகளாக பிரிக்கப்பட்டிருக்கின்ற நிலையில் மாற்றம் ஏற்பட்டு ஏதோ ஒரு காலத்தில் இந்தச் சமுதாயத்தில் சில பல பிரிவுகள் ஏற்பட வேண்டியிருந்தது. அது ஒத்துக்கொள்ள வேண்டிய வரலாறுதான். இல்லையென்று நான் மறுக்க வில்லை. பிரிவு ஏற்பட்டதற்காக கடைசிவரை பிரிந்தே இருக்க வேண்டுமா? எண்ணிப்பார்க்க வேண்டும்.

மலையிலே மழை பொழிகிறது அதிலே பல மலைப்பாறை இடுக்கின் வழியாக பல நதிகள் உருவாகின்றன. உருவாகிய ஒவ்வொரு நதிக்கும் ஒரு பெயர் வைக்கிறோம். காவேரி, கங்கை, யமுனா, கோதாவரி, கிருஷ்ணா என்று பெயர் வைக்கிறோம். ஆனால் கையில் எடுத்துப்பார்த்தால் எல்லாம் தண்ணீர்தான். பல பிரிவுகளிலே உற்பத்தியான காரணத்தால், பல பிரிவு களிலே ஓடுகிற காரணத்தால் பல பெயர்களை

பெறுகின்றனவேயல்லாமல் அத்தனையும் குணத்திலே தண்ணீர்தானே. அதைத்தான் நான் கேட்கிறேன்.

தேவர்களாக இருக்கலாம். கள்ளர்களாக இருக்கலாம். அகமுடையர்களாக இருக்கலாம். செட்டியார்களாக இருக்கலாம். ஆதிதிராவிடர்களாக இருக்கலாம். மனித சமுதாயத்திலே நாம் பல பிரிவுகளாக இருக்கலாம். குறிப்பாக தமிழ்ச் சமுதாயத்திலே பல பிரிவுகளாக இருக்கலாம். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று சொன்ன வள்ளுவருடைய குறளை நாம் தூக்கியெறிந்து விடுகிறோமா? வள்ளுவரை புறக்கணித்து விடுகிறோமா? எல்லா உயிர்க்கும் பிறப்பு ஒன்றுதான். இதனை நாம் புரிந்துகொள்ள வேண்டாமா? திருவள்ளுவருடைய இந்த வார்த்தைக்கு நாம் எதிராக செயல்படலாமா? பாரதியைப் பற்றிப் பேசுகிறோம். பாரதியின் புகழ் பாடுகிறோம். சாதிகள் இல்லையடி பாப்பா என்று பாப்பாவிற்கு சொன்னதை தாத்தா கூட கேட்க மறுக்கிறோம். இது நியாயம்தானா? எண்ணிப் பார்க்க வேண்டாமா?

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் ஆகட்டும், தந்தை பெரியாராகட்டும், பேரறிஞர் அண்ணாவாகட்டும், பெருந்தலைவர் காமராசர் ஆகட்டும், பசும்பொன் தேவராகட்டும், காயிதே மில்லத் ஆகட்டும், அம்பேத்கர் ஆகட்டும் – யாராக இருந்தாலும் எவரும் சாதியின் பெயரால் ஒருவரையொருவர் அடித்துக் கொள்ளுங்கள், வதைத்துக் கொள்ளுங்கள், பேதாபேதங்களை கற்பித்து செத்துத் தொலையுங்கள் என்று யாரும் சொன்ன தில்லை. அமைதியாக அனைவரும் ஒன்றுபட்டு வாழுங்கள் என்பதுதான் ஆன்றோர் வாக்கு. அதைத்தான் இந்த பெரி யோர்களெல்லாம் நமக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதை நாம் மறந்துவிடக் கூடாது.

பல பிரிவுகள் இருக்கலாம். இருந்தாலும் எல்லாம் கடலில் சேரும்பொழுது ஒரே தண்ணீர்தான். அதை மறந்து

விடலாமா? அதை மறந்தால் நம்முடைய இனத்தின் ஒற்றுமை உணர்வு காப்பாற்றப்பட முடியுமா? அந்த ஒற்றுமை இல்லாத காரணத்தினால்தான் இன்றைக்கு யார் யாரோ வந்து நமக்கு அறிவுரை சொல்கிறார்கள்.

கடந்த ஐந்தாறு மாதங்களுக்கு முன்பு தமிழ்ச்சான்றோர் என்ற புலவர் பெருமக்களெல்லாம் மொத்தமாக எழுந்தார்கள். எழுந்து என்மீது பாணம் தொடுத்தார்கள். என்ன பாணம்? எப்பொழுது நீ தமிழை தமிழ்நாட்டில் பயிற்சி மொழியாக ஆக்கப்போகிறாய் என்று கேட்டார்கள். நான் ஏதோ அதற்கு தயங்குவது போல எண்ணிக்கொண்டார்கள். உண்ணா நோன்பு இருந்தார்கள். ஊர்வலங்கள் நடத்தினார்கள். பேரணிகள் நடத்தினார்கள். பொதுக் கூட்டங்கள் நடத்தினார்கள். தெருவுக்குத் தெரு பேசினார்கள். பத்திரிகைகளில் எழுதினார்கள்.

தமிழ்நாடு அதற்கு பக்குவமாகட்டும் என்று நான் கொஞ்ச நாள் காத்திருந்தேன். ஏனென்றால் இங்கே தமிழ்க்குடிமகன் சொன்னதைப்போல 1968 ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா தமிழக சட்டமன்றத்திலே முதலமைச்சராக இருந்து கொண்டு சிலம்புச் செல்வர் மா.பொ.சி. கேட்ட அந்தக் கோரிக்கைக்கு ஒரு வாக்குறுதியாக தந்தார். இருமொழித்திட்டம், தமிழ் ஆங்கிலம் என்று இருமொழித் திட்டத்தை அறிவித்துவிட்டு அங்கே மா.பொ.சி.க்கு தந்த வாக்குறுதி, அந்த அவைக்கு தந்த வாக்குறுதி, தமிழகத்திற்கு தந்த வாக்குறுதி எங்களுக்கு இட்ட கட்டளை என்ன தெரியுமா? தமிழ் பயிற்சி மொழியாக ஆக வேண்டும் என்பதுதான்.

இன்றைக்கு நாங்கள் ஐந்தாவது வரையிலே தமிழ் கட்டாயமாக பயிற்சி மொழி என்று சொல்கிறோம். அன்றைக்கு அண்ணா சொன்னது கல்லூரி வரையிலே பயிற்சி மொழியாக தமிழ் பாடமொழிதான் இருக்க வேண்டும் என்று சொன்னார். அண்ணா மறைந்த பிறகு

ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நான் அண்ணா சொன்ன அந்தக் கொள்கையை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக கல்லூரிவரையிலே தமிழ்பாட மொழி என்ற நிலையை உருவாக்க விதிமுறைகள் செய்தபோது தமிழ்நாட்டிலே மாணவர்களெல்லாம் கிளர்ந்து எழுந்தார்கள். அப்படி சில அரசியல் கட்சிகள் மாணவர்களை தூண்டிவிட்டன. அந்தக் கட்சிகளின் பெயர்களைச் சொல்ல நான் விரும்பவில்லை. சில கட்சிகளில் உள்ள பெரியவர்களெல்லாம் தூண்டிவிட்டார்கள். அதிலே ஒரு கிளர்ச்சி ஏற்பட்டது.

அதற்குப் பிறகுதான் சர்.ஏ.லெட்சுமணசாமி முதலியார் அவர்களை ஒரு நபர் குழுவாக நியமித்து அவர் முறை வகுத்துக் கொடுத்து கல்லூரி வரையிலே தமிழ் பாடமொழி எப்படி அமல்படுத்தப்பட வேண்டும் என்பதற்கான சில வகைகளை, சில வழிமுறைகளை எழுதித் தந்தார். அதன்படிதான் தமிழ்க்குடிமகன் குறிப்பிட்டதைப்போல இன்றைக்கு பல மாணவர்கள் தமிழை பயிற்று மொழியாக எடுத்துக்கொண்டு அதற்குரிய சலுகைகளை, அதற்குரிய தனி உதவிகளை பெற்று வருகிறார்கள். இது வேறு.

ஐந்தாவது வகுப்பு வரையிலே தமிழில்தான் கற்பிக்க வேண்டும். அதற்காக ஆங்கிலத்தை தூக்கியெறி என்பதல்ல. ஆங்கில மொழிப் பாடங்களையும் படிக்கலாம். ஆனால்; ஆங்கிலத்திலே படிக்காதே. தமிழைப்படி, தமிழில்படி. ஆங்கிலத்தைப்படி; ஆங்கிலத்திலே படிக்காதே. ஆங்கிலத்தில் படிப்பது என்பது வேறு, ஆங்கிலத்தைப் படிப்பது என்பது வேறு. தமிழைப் படிப்பது என்பது வேறு. தமிழில் படிப்பது என்பது வேறு. ஒலிபெருக்கி என்பதை ஆங்கிலத்திலே மைக் என்கிறோம். இதை ஒலிபெருக்கி என்றே தமிழில் சொல். அதைப்போல அறிவுலகத்திற்கு இன்றைக்கு எந்தெந்த தேவைகள் இருக்கின்றனவோ அவைகளையெல்லாம் விஞ்ஞான உலகத்திற்கு என்னென்ன தேவையோ அதைப்

பற்றியெல்லாம் பயிற்சி பெறும்பொழுது அதை தமிழிலேயே பெறு. ஆறு கோடி மக்கள் இங்கு இருக்கிறோம். நான் கேட்கிறேன் என்ன வாதிடுகிறார்கள்? ஆங்கிலம் படிக்காவிட்டால் அமெரிக்காவிலே, ஜெர்மனியிலே வேலை கிடைக்குமா என்று கேட்கிறார்கள். ஆறு கோடி மக்கள் அந்த ஆறு கோடி பேர்களில் இரண்டு கோடி பேர்களாவது படிக்கின்ற மாணவர்கள் என்று வைத்துக் கொள்கிறோம். இந்த இரண்டு கோடி மாணவர்களுக்கு அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் வேலை கிடைத்துக் கொண்டிருக்கிறதா? இல்லை. ஏதோ சில ஆயிரம் பேர் மிஞ்சிப்போனால் இலட்சம்பேர் அதுகூட நான் அதிகமாக சொல்கிறேன். சில ஆயிரம்பேர் அல்லது பல்லாயிரம்பேர் வெளிநாடுகளுக்கு வேலைக்கு செல்லலாம். மீதமுள்ளவர் களெல்லாம் தமிழிலே படித்து தமிழ்நாட்டிலே வாழக் கூடாதா?

அறிஞர் அண்ணா ஆரம்பக் கல்வியை தமிழிலேதான் படித்தார். அவர் அறிஞராக ஆகவில்லையா? இராஜாஜி, சி.சுப்பிரமணியம் இவர்களெல்லாம் சொன்ன சொல்லை இங்கே தமிழ்க்குடிமகன் சுட்டிக்காட்டினார். இராஜாஜி என்ன சொன்னார்? தமிழை தாய் மொழியிலே படிப்பது ஒரு குழந்தைக்கு தாய்ப்பாலை அருந்துவதைப்போல. ஆங்கில மொழியிலே படிப்பது புட்டிப்பால் தருவதுபோல. இதை இராஜாஜி சொன்னாரா இல்லையா? 'தமிழால் முடியும்' என்று ஒரு புத்தகமே சி.சுப்பிரமணியம் எழுதி தமிழில்தான் பயிற்சிகள் இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டு இருக்கிறாரா இல்லையா?

சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் குடியரசுத் தலைவராக இருந்தவர். அவருடைய தலைமையில் 1948 ஆம் ஆண்டு ஒரு கமிஷன் போடப்பட்டு எந்த மொழியிலே பயிற்சி இருக்க வேண்டுமென்று ஆராய்ந்து இராதாகிருஷ்ணன் குழு அவரவரது தாய்மொழியிலேதான் பயிற்சி இருக்க வேண்டும் என்று அந்தக் குழு சிபாரிசு

செய்திருக்கிறதா இல்லையா? இராதாகிருஷ்ணனைவிட, இராஜாஜியைவிட, அண்ணாவைவிட, நம்மையெல்லாம்விட அறிவாளி ஜெயலலிதா அல்லவா? அதனால்தான் அவர் சொல்கிறார், ஏதோ நாம் இந்திக்கு கதவு திறந்துவிடுகிறோமாம்.

இந்தி ஆதிக்க எதிர்ப்பு என்றால் ஜெயலலிதாவிற்கு என்னவென்று தெரியுமா? இந்தி ஆதிக்க எதிர்ப்பு போராட்டம் என்றால் என்னவென்று தெரியுமா? மாநிலங்களவையில் ஜெயலலிதா இந்தியில் பேசவில்லையா? உங்களைப் போன்றவர்களுக்குத் தேவை இந்தி. இந்தி ஆதிக்கத்தை இன்றல்ல – நாளையல்ல – என்றைக்கும் எதிர்க்கக் கூடிய ஒரு இயக்கம், தமிழகத்திலே இந்தி ஆதிக்கத்தை எதிர்க்கின்ற ஒரு சிப்பாயாக இருக்கின்ற இயக்கம் தி.மு.கழகம் என்பதை மறந்துவிடக் கூடாது.

பாளையங்கோட்டை என்றார்கள். இந்த அம்மையாருக்கு தெரிந்ததெல்லாம் சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு எப்பொழுது போகலாமென்பதுதான். பாளையங்கோட்டைக்கு போனவர்களைப் பற்றி இந்த அம்மாவிற்கு கவலையில்லை. நான் கேட்கிறேன்; ஐந்தாவது வரையிலே தமிழ் பாடமொழியாக, பயிற்சி மொழியாக இருக்க வேண்டும் என்கின்ற இந்தக் கொள்கையில் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சிக்கு எங்களோடு உடன்பாடு உண்டு. இப்பொழுது உடன்பாடு உண்டா இல்லையா என்பது எங்களுக்குத் தெரியாது. எங்களோடு தேர்தல் உடன்பாடு இல்லையென்பதற்காக இந்த உடன்பாடும் இல்லை என்று சொல்லிவிட மாட்டார்கள். பிறகு அவர்கள் என்ன சொல்லப் போகிறார்கள்?

இன்றைக்கு ஜெயலலிதாவின் அறிக்கை பத்திரிக்கைகளில் வந்திருக்கிறது. தொலைக்காட்சி களிலெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். நாமென்னவோ தமிழை பயிற்சி மொழியாக்கி ஐந்தாவது வரையிலே பயிற்சி மொழியாக்கி அதன் காரணமாக ஆங்கிலத்தை அறவே அகற்றிவிட்டு இந்திக்கு இடம் தரப்போகிறோம் என்று ஒரு புதிய வாதத்தை எழுப்பியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பைத்தியக்காரத்தனம் தி.மு.கழகத்திலிருக்கிற இன்றைக்கு பிறக்கிற குழந்தைக்குக் கூட கிடையாது என்பதை ஜெயலலிதாவிற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு நாட்டில் தாய்மொழிக்கு உரியவர்கள் அந்த தாய்மொழியில் கல்வியிலே ஐந்தாம் வகுப்பு வரையிலே ஆரம்பக் கல்வியைப் பயில்வதிலே என்ன தவறு? என்ன அநியாயம் இது? தாய்மொழியிலே படிக்காதே என்று சொல்வதைவிட வெட்கங்கெட்ட அல்லது மக்களை குழப்புகின்ற ஒரு வாதம் இருக்க முடியும் என்று நீங்கள் கருதுகிறீர்களா?

ஒரு தமிழன் என்ற முறையிலே நான் துடித்துப்போகிறேன்; கொதித்துப்போகிறேன். ஒரு அரசியல் கட்சியின் தலைவர், ஒரு நாட்டின் முதலமைச்சர் என்கிற முறையிலே இதைப்பற்றி பொறுமையாகப் பேசவேண்டும் என்பதற்காகத்தான் நிறுத்தி நிதானமாகப் பேசுகிறேன். நமக்கெல்லாம் அவ்வளவு ஆத்திரம் பொங்கக் கூடிய அறிக்கையை இன்றைக்கு ஜெயலலிதா வெளியிட்டிருக்கின்றார். நம்முடைய தமிழ்க்குடிமகன் இங்கே அதற்கு பதில் சொன்னார். அவர் சொன்னதைப்போல் தமிழ்ச் சான்றோர்கள், ஆன்றோர்கள் இருக்கின்றார்கள். தமிழை பயிற்சி மொழியாக ஆக்கு என்று எனக்கு கட்டளையிட்டவர்களே, எங்கே நீங்கள் போனீர்கள்? இதற்கு பதில் சொல்ல வாருங்கள். தெருவுக்குத் தெரு கூட்டம் போட்டு பதில் சொல்லுங்கள்.

வீதிக்கு வீதி கூட்டம்போட்டு உங்கள் பதில் என்னவென்று முழங்குங்கள். அப்பொழுதாவது தெரிந்து கொள்ளட்டும்.

தமிழ்நாட்டின் மீது, தமிழ் மொழியின் மீது கை வைப்பது, அங்கே குறும்புத்தனம் செய்வது எவ்வளவு பொல்லாத காரியம் என்பதை ஜெயலலிதாக்கள் புரிந்து கொள்ளட்டும். இதை அண்ணாவின் சிலை திறப்பு விழாவில் தமிழ்ச்சான்றோர்களுக்கும் ஆன்றோர்களுக்கும் ஒரு வேண்டுகோளாக அன்புக் கோரிக்கையாக வைக்கிறேன். நீங்கள் உத்தரவிட்டீர்கள். உங்களது ஆணையை நிறைவேற்றிவிட்டேன். என் ஆணை நிறைவேற தமிழ் அரியாசனம் ஏறி நிலைத்து வாழ நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள் என்று அண்ணா சிலையின் முன்பாக ஆன்றோர்களையும் சான்றோர்களையும் தமிழ்ப்புலவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

* * * * * *

**சென்னை, சேப்பாக்கம், மேயர் சிட்டிபாபு தெருவில் பிப்ரவரி 26ஆம் தேதி அன்று அனைத்து கட்சிக் கூட்டத்தில் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை:–**

எனக்கு ஒருபுறம் மழை வரவேண்டுமென்ற ஆசை. கொஞ்ச நேரம் வராமல் இருக்க வேண்டுமென்கிற வேண்டுகோள். இந்த இரண்டிற்கும் மத்தியில் நான் நின்று கொண்டிருக்கிறேன். ஏனென்றால் நல்ல மழை பொழிந்து அதுவும் சென்னையைச் சுற்றியிருக்கின்ற ஏரிக்ளில் நீர் நிரம்பி சென்னை மாநகரத்து மக்களுடைய தண்ணீர்த் தேவை நிறைவு செய்யப்பட வேண்டு மென்பதால் மழை பொழிய வேண்டுமென்கிற ஆசை.

இன்றைக்கு தமிழகத்திலே தமிழுக்கு அறைகூவல் விடப்பட்டிருக்கின்ற இந்த நேரத்தில் நானும் நம்முடைய தோழமைக் கட்சிகளின் தலைவர்களும் ஒரே நிலையில் நின்று தமிழைக் காப்ப்ற்றவும் தமிழ்ச் சமுதாயத்தின் எதிர்காலத் தைப் பாதுகாக்கவும் உறுதி எடுத்துக்கொள்ள எங்களோடு சோ்ந்து நீங்களும் உறுதி எடுத்துக் கொள்ள மழை சற்று நேரம் நம்மோடு ஒத்துழைக்க வேண்டுமென்ற அந்த வேண்டு கோளையும்தான் இங்கே நான் வைத்து உங்கள் முன்னால் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

கடந்த நவம்பர் திங்கள் 99ஆம் ஆண்டு 10ஆம் நாள் தமிழ் வழிக்கல்விக்கான ஆணையை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பிறப்பித்தது. ஏறத்தாழ அதற்கு நூறு நாட்கள் கழித்து – எப்படி ஏழு நாட்களுக்குப் பிறகு தேர்தல் கமிஷனுக்கு திருச்சி யிலே விசாரணை நடத்த வேண்டுமென்று தோன்றியதோ, அதைப் போல ஏறத்தாழ நூறு நாட்களுக்குப் பிறகு அம்மையாா் ஜெயலலிதா அவர்களுக்கு திடீரென்று ஞானோதயம் ஏற்பட்டு, அடடா, இந்தக் கருணாநிதியாலும், கழக ஆட்சியாலும் தமிழுக்கு ஆபத்து ஏற்பட்டு விட்டதே, அதைக் காப்பாற்ற நம்மைத் தவிர தமிழகத்தில் யாா் இருக்கிறாா்கள் என்கின்ற

அந்த உணர்வோடு, வழக்கம்போல் ஒரு அறிக்கையை ஏடுகளுக்கு வழங்கி, ஏடுகளும் அந்த உணர்வைப் புரிந்து கொள்ளாமல் பக்கம் பக்கமாக அதை வெளியிட்டு மகிழ்ந்திருக்கின்றன.

அந்த அறிக்கை வெளிவந்தபோது நான் சிவகங்கையில் அமைச்சர்கள் தமிழ்க்குடிமகன், தம்பி இரகுமான்கான் ஆகியோரோடு அறிஞர் அண்ணா அவர்களின் சிலையைத் திறந்து வைத்து நடைபெற்ற கூட்டத்திலே கலந்து கொண்டிருந்தேன். அப்போதுதான் மேடையில் அந்த அறிக்கை வெளிவந்த ஏடுகள் என்னிடத்திலே தரப்பட்டன.

நான் அப்போது பேசும் போது சொன்னேன். "நான் நிறுத்தி நிதானமாகப் பேச விரும்புகிறேன். ஏனென்றால் கொதித்துப் போயிருக்கிறேன். என்னுடைய இதயம் தாங்க முடியாத வேதனையோடு துடித்துக் கொண்டிருக்கின்றது. எனவே நான் மிகப் பெரும் பொறுப்பிலே, தமிழகத்தை ஆளும் பொறுப்பிலே இருக்கின்ற காரணத்தால், நிறுத்தி நிதானமாக சில வார்த்தைகளைப் பேச வேண்டியிருக்கின்றது" என்று சொல்லி, அந்த அறிக்கையைப் பற்றி சில கருத்துக்களை வெளியிட்டு, "தமிழ்நாட்டிலே உள்ள புலவர்களே, சான்றோர்களே, ஆன்றோர்களே, நீங்கள் எல்லாம் போராடி என்னை வலியுறுத்தி தமிழ் வழிக் கல்வியை ஆரம்ப வகுப்பிலேயிருந்து ஐந்தாம் வகுப்பு முடிய கொண்டு வர வேண்டுமென்று வலியுறுத்தினீர்கள். உங்களுடைய கட்டளையை நான் நிறைவேற்றிவிட்டேன். கட்டளையை நிறைவேற்றியவனைப் பார்த்து கடுமையான கண்டனம் இன்றைக்குப் புறப்பட்டிருக்கின்றது. நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் ?" என்று அன்றைக்கு கேட்டேன். அவர்களும் தங்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

இங்கே நம்முடைய தோழமைக் கட்சிகளின் தலைவர்களும் அரிய பல விளக்கங்களையெல்லாம் எடுத்துக்கூறி, தமிழகத்திற்கு, தமிழ்ச் சமுதாயத்தின்

எதிர்காலத்திற்கு விடுக்கப்பட்டுள்ள சவாலை எப்படி சந்திப்பது என்பதைப் பற்றி உரையாற்றி யிருக்கிறார்கள்.

பெருங்கவிக்கோ சேதுராமன் பேசும்போது உத்தமர் காந்தியடிகள் விடுதலைப் போராட்டக் காலத்திலேயே தாய் மொழிவழிக் கல்வியைப் பற்றி என்ன சொன்னார் என்பதைக் குறிப்பிட்டிருக்கிறார்.

**“எனக்கு ஒரு சர்வாதிகாரியின் அதிகாரம் இருக்குமேயானால் மாணவர்கள் தங்கள் தாய்மொழியிலேயே பயில வேண்டும் என்ற ஆணையைப் பிறப்பிப்பேன். அந்த ஆணையை நிறைவேற்ற ஆசிரியர்கள் தயங்குவார்களேயானால் அவர்களையெல்லாம் வேலையை விட்டு விலக்கி விட்டிற்கு அனுப்பிவிடுவேன்”**

என்பது உத்தமர் காந்தியடிகள் விடுதலைப் போராட்டக் காலத்திலேயே சொன்ன சொல்லாகும்.

அந்த உறுதியை உள்ளத்திலே ஏந்திக் கொண்டு தான் இன்றைக்கு தாய்மொழிக்கல்வி – தமிழ் மொழிக் கல்விக்கு நாம் ஆணை பிறப்பித்து அது நடைமுறைக்கு வர வேண்டுமென்று கூறியிருக்கிறோம்.

பண்டித ஜவகர்லால் நேரு இது பற்றி என்ன சொன்னார் என்பது **`Nehru and the Language Problem'**என்ற புத்தகத்தில் 49ஆம் பக்கத்திலே குறிப்பிடப்பட்டுள்ளது.

**“தாய்மொழிதான் பயிற்று மொழியாக இருக்க வேண்டும்”**

என்று நேரு அதிலே தெரிவித்துள்ளார்.

எனவே காந்தியடிகளின் கருத்து, நேருபிரானின் கருத்து ஆகியவைகளுக்கு முரண்பாடான கருத்தை தமிழக அரசு இன்றைக்கொன்றும் செயற்படுத்திடவில்லை.

எங்களை ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் **“தமிழைப் பாடமொழியாக்க வேண்டும் என்று சொல்வது இந்த நாட்டிலே தான் தேவைப்படுகிறது. (எவ்வளவு வேதனை யிருந்தால். அண்ணா இப்படி சொல்லியிருப்பார் என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்) ஆங்கில நாட்டில், ஆங்கிலம்தான் பாடமொழி என்று சொல்லவேண்டிய தேவை எழவில்லை. எந்த நாட்டிலும் இல்லாத விந்தை இங்கேதான் இருக்கிறது**

**தமிழர்களுக்குத் தமிழ்நாட்டில் தமிழால் முடியும் என்று நூல் எழுதிக் காட்ட வேண்டிய நிலைமை இருக்கிறதே என்பதுதான் நமது கவலை.”** என்று தனது வேதனையை அண்ணா வெளிப்படுத்தினார்.

தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்கள்,

**“ஜெர்மனியர், பிரெஞ்சுக்காரர் முதலியோர் எம்மொழியில் கல்வி பயில்கிறார்? தமிழன் மட்டும் ஏன் பிறமொழி வாயிலாகக் கல்விபெற வேண்டும் என்பது விளங்கவில்லை. தமிழன் அடிமைப் பேய் வாய்ப்பட்டுக் கிடக்கிறான்”**

என்று உருக்கத்தோடு அன்றைக்குக் குறிப்பிட்டிருக் கின்றார்.

“இந்த உணர்வுகளின் அடிப்படையிலேதான் பேரறிஞர் அண்ணா அவர்கள் 1968 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 23 ஆம் நாள் தமிழகச் சட்டமன்றத்திலே தீர்மானத்தை நிறைவேற் றினார். அந்தத் தீர்மானத்தை உங்கள் முன்னால் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

**“தமிழகத்தின் எல்லாப் பள்ளிகளிலும் மும்மொழித் திட்டத்தை அகற்றிவிட்டு தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளுக்கு இடமளித்து, இந்தி மொழியை அறவே நீக்கிட இம்மன்றம் தீர்மானிக்கிறது.**

**தமிழகத்தில் தமிழ் பயிற்சி மொழியாகவும், பாட மொழியாகவும் எல்லாக் கல்லூரிகளிலும், நிர்வாக மொழியாக பல்வேறு துறைகளிலும், ஐந்தாண்டுக் காலத்துக்குள் நடைமுறைக்கு வருவதற்கான துரிதமான நடவடிக்கையை மேற்கொள்வது என்று இம்மன்றம் தீர்மானிக்கிறது"**

என்ற தீர்மானத்தை 23–1–1968 அன்று பேரறிஞர் அண்ணா முதல்வராக இருந்து சட்டப் பேரவையிலே நிறைவேற்றினார்.

நாம் எடுத்த முடிவு அண்ணாவின் தீர்மானத்திற்கு எதிரானது என்று செல்வி ஜெயலலிதா தனது அறிக்கையிலே குறிப்பிடுகிறார். மேலே உள்ள அண்ணாவின் தீர்மானத்தை ஒரு முறை படித்துப் பார்த்தால் ஜெயலலிதாவின் கூற்று எவ்வளவு தவறானது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

அண்ணா அவர்கள் தீர்மானத்திலே தெரிவித்த ஐந்தாண்டு காலத்திற்குள்ளாக அந்த முயற்சியிலே அவர் மறைந்த பிறகு நாம் ஈடுபட்டாலுங்கூட அதற்கேற்பட்ட எதிர்ப்புகளைப் பற்றி எனக்கு முன்னால் இங்கே பேசியவர்கள் எல்லாம் குறிப்பிட்டார்கள். அந்த எதிர்ப்பையும் மீறி திரு.லெட்சுமணசாமி முதலியார் அவர்களைக் கொண்டு தனி நபர் குழு ஒன்றினை அமைத்து, அவரின் யோசனைப்படி இன்று கல்லூரிகளிலே தமிழைப் பாடமொழியாக ஆக்குவதிலே .ஓரளவு நாம் வெற்றி பெற்றிருக்கிறோம் என்றாலுங்கூட, அதற்கு அடித்தளமாக இருக்கின்ற ஆரம்பப் பள்ளிகளில், நர்சரிப் பள்ளிகளில், மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் ஐந்தாம் வகுப்பு முடிய தமிழ்தான் பயிற்று மொழியாக இருக்க வேண்டுமென்று நாம் பிறப்பித்திருக்கின்ற இந்த ஆணை எப்படி தமிழர்களைப் பாதிக்கக்கூடும் என்பதை தயவு செய்து நீங்கள் எண்ணிப்பார்க்கவேண்டும்.

அதே சட்டசபையிலே அண்ணா பேசும்போது **"தமிழ் பாடமொழி பயிற்று மொழி என்ற பிரச்சினையைப் பொறுத்தவரையில் பல்வேறு கருத்துக்களெல்லாம் சொல்லப்பட்டன. நான் ஆங்கிலத்தைப் புறக்கணிக்கிறவன் அல்ல. ஆனால், ஆங்கிலம்தான் இருக்க வேண்டும். தமிழ் அதற்குரிய இடத்தைப் பெற வேண்டாமென்ற எண்ணம் கொண்டவனும் அல்ல. ஆங்கிலம் எந்தெந்தக் காரியங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறதோ அந்தக் காரியங்களுக்கு இந்தியாவில் உள்ள மொழிகளில் எது தகுதி உள்ள மொழி என்றால், அது தமிழ், தமிழ் என்று சொல்ல நான் தயக்கப்படமாட்டேன். ஐந்து ஆண்டு களுக்குள் தமிழகத்தின் எல்லாக் கல்லூரிகளிலும் தமிழைப் பாட மொழியாகவும், பயிற்று மொழியாகவும் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்"** என்று அன்றைக்கு அண்ணா பேசினார்.

இதையெல்லாம் மக்கள் இன்றைக்கு மறந்திருப்பார்கள் என்ற எண்ணத்தின் காரணமாக செல்வி ஜெயலலிதா அவர்கள் அண்ணாவின் கொள்கைக்கே இது விரோதமானது என்று சொல்கிறார்.

அண்ணா யாரென்றே தெரியாதவர்கள், அண்ணாவிடத் திலே ஒரேயொரு முறை ஏதோவொரு திரைப்பட விழாவிலே பரிசு வாங்குவதற்காக மாத்திரமே, அண்ணாவைப் பார்த்த வர்கள், அதற்கு மேல் அண்ணாவைப் பற்றி தெரியாத வர்கள், எனக்கு முன்னால் இங்கே பேசியவர்கள் குறிப்பிட்டதைப் போல இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து நடைபெற்ற போராட்டத்தின் வரலாறு புரியாதவர்கள், தாளமுத்து நடராஜன் என்றால் யார், தாளமுத்து நடராஜனுக்கும் சசிகலா நடராஜனுக்கும் வித்தியாசம் தெரியாதவர்கள் (பலத்த கைத்தட்டல்) தாளமுத்து நடராஜன் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து ராஜாஜியின் ஆட்சியின் போது சிறை புகுந்து பிணமாக வெளிவந்த இரண்டு வாலிப வீரர்கள் – அந்த வரலாறு தெரியாது அவர்களுக்கு.

தம்பி எல்.கணேசன் இங்கே குறிப்பிட்டதைப் போல பதிமூன்று வயதில் பள்ளிப் பருவத்தில் திருவாரூர் வீதியில் - "ஓடி வந்த இந்திப் பெண்ணே கேள், நீ தேடி வந்த கோழை யுள்ள நாடிதல்லவே" என்று கூறிக் கொண்டு புலி, வில், கயல் பொறித்த தமிழ்க்கொடியை கையிலே ஏந்தி ஒவ்வொரு நாளும் ஊர்வலமாகச் சென்றானே கருணாநிதி, அந்தக் கருணாநிதியைப் பற்றிய வரலாறு உங்களுக்குத் தெரியாது (பலத்த கைதட்டல்)

பல்லடம் பொன்னுசாமி, இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து உண்ணாவிரதம் இருந்து, ஊசி மூலமாக உணவு செலுத்தப் பட்டு சிறைச்சாலையிலே அடைக்கப்பட்டானே, அடைக்கப் பட்டபோது சிறையிலே அடிக்கப்பட்டு பல் உடைபட் டானே, அந்தப் பல்லடம் பொன்னுசாமியைப் பற்றி உங்களுக்குத் தெரியாது -

கட்டாய இந்தியை எதிர்த்து 65ஆம் ஆண்டு நடைபெற்ற மொழிப் புரட்சியின்போது மாயவரத்திலே தீ வைத்துக் கொண்டு செத்தானே மாயவரம் சாரங்கபாணி என்ற மாண வன், அவனை உங்களுக்குத் தெரியாது -

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே ஆதிக்க இந்தியை எதிர்த்துப் போர்க்கொடி தூக்கி வந்த சிவகங்கை ராஜேந்திரன் என்கிற கல்லூரி மாணவன் அங்கே தடியடிபட்டு துப்பாக்கிக் குண்டை மார்பிலே ஏந்தி பிணமாக விழுந்தானே, அந்தச் சரித்திரம் உங்களுக்குத் தெரியாது -

சென்னையிலே சிவலிங்கம், அரங்கநாதன் என்ற இரண்டு வாலிபர்கள் தங்களுடைய தேக்கு மர தேகங்களுக்கு தீ வைத்துக் கொண்டு சந்தனக் கட்டைகள் போல் எரிந்து மடிந்தார்களே அவர்களை உங்களுக்குத் தெரியாது. அவர்களுடைய பெயரால் இங்கே அமைக்கப்பட்டிருக்கின்ற இரண்டு பாலங்கள் - நினைவுச் சின்னங்கள் - இவைகள் எல்லாம் எதற்காக வைக்கப்பட்டன என்ற செய்தி உங்களுக்குத் தெரியாது.

ஆனால் அம்மையார் அவர்கள் அண்ணாவைவிட அறிவாளி (சிரிப்பு), பெரியாரைவிட புத்திசாலி (சிரிப்பு), ராஜாஜியைவிட திறமை பெற்ற ஞானி (சிரிப்பு), டாக்டர் ராதாகிருஷ்ணனைவிடப் புலமை மிக்கவர் (சிரிப்பு). அவர் தமிழ் வழிக் கல்வி கூடாது என்று சொல்கிறார். யாரைத் திருப்திப்படுத்த? அதுவும் நூறு நாட்களுக்குப் பிறகு ஏன் சொல்கிறார்?

ஒவ்வொரு செய்திக்கும் மறுநாளே அறிக்கை விடுகின்ற அம்மையார், பாலம் கட்டி ஸ்டாலின் திறந்து வைத்தால்கூட மறுநாளே பாலத்தால் போக்குவரத்து நெருக்கடி அதிகமாகிறது என்று பாலத்திற்கே அறிக்கை விடுகின்ற அம்மையார், தமிழ் வழிக் கல்வி என்று நான் ஆணை பிறப்பித்த உடனேயே அதைப்பற்றி அறிக்கை விடாமல் அல்லது அடுத்த வாரத்தில்கூட அறிக்கை விடாமல், ஏதோ வேலை வெட்டி இருந்தது. அல்லது நம்முடைய வாழப்பாடியார் சொன்னதைப் போல, அந்த அம்மையாருக்கு ஹைதராபாத்திலே வேலை இருந்தது. திராட்சைப் பழம் பறித்து, விற்று அதைக் காசாக்கி வருமான வரி கட்ட வேண்டிய தொல்லை இருந்தது (பலத்த சிரிப்பு). எனவே அதைப்பற்றி உடனே அறிக்கை விடாமல் நூறு நாட்களுக்குப் பிறகு அறிக்கை விட்டிருக்கிறார்.

இந்தப் பெரியவர்கள் எல்லாம் இதைப் பற்றி என்ன சொன்னார்கள்? மூதறிஞர் ராஜாஜி - தாய்மொழியிலே பயிலுவது தாய்ப் பால் அருந்துவதைப் போல, பிற மொழியிலே பயிலுவது புட்டிப்பால் அருந்துவதைப்போல என்று உவமைக்கே பெயர் பெற்ற ராஜாஜி கூறிய உவமை இது. தாய் மொழியிலே பயிலுவது தான் தாய்ப்பால் அருந்துவதைப் போலவாம். புட்டிப்பால் அருந்துவதைப் போன்றது பிறமொழியிலே பயிலுவது என்றார் ராஜாஜி. நம்முடைய டாக்டர் ராமதாஸ் அவர்கள் தாய்ப்பால் மாத்திரம்தான் வேண்டுமென்று இங்கே வாதிட்டார். ஆனால் இந்தக்

காலத்தில் தாய்ப்பால் போதாத காரணத்தால் தாய்ப்பாலும் தந்து புட்டிப்பாலும் தருவது டாக்டருக்குத் தெரியாத விஷயமல்ல. டாக்டரிடம் வரும் நோயாளிகள்கூட அதைச் சொல்லியிருக்கக் கூடும். எனவே புட்டிப்பால் என்பது ஆங்கிலம். தாய்ப்பால் என்பது தமிழ் என்று ராஜாஜி சொன்னார். இரண்டைப் பற்றியும் தெரிந்திருக்க ஜெயலலிதா அம்மையாருக்கு நியாயமில்லை (பலத்த சிரிப்பு, கைதட்டல்). எனவே அவர்கள் தமிழ் வழிக் கல்வியை இன்றைக்கு வெறுக்கிறார்கள். புறக்கணிக்கிறார்கள், மறுக்கிறார்கள்.

*1948* ஆம் ஆண்டு டாக்டர் ராதாகிருஷ்ணன் தலைமையில் ஒரு குழு இந்திய அளவிலே அமைக்கப்பட்டு எந்த மொழியிலே கல்வி இருக்க வேண்டுமென்ற **Terms of Reference** தரப்பட்டு, அதற்கு டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் தந்த முடிவு என்ன தெரியுமா? அவரவர்களுடைய தாய்மொழி எதுவோ அந்த மொழியின் அடிப்படையிலே தான் பயிற்று மொழி இருக்க வேண்டும், அந்த வழிக் கல்வி தான் அமைய வேண்டும் என்று டாக்டர் ராதாகிருஷ்ணன் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். ஆனால் அம்மையர் ஜெயலலிதா, ராதாகிருஷ்ணனைவிட, ராஜாஜியைவிட, மகாத்மா காந்தியை விட, ஆசிய ஜோதி பண்டித ஜவகர்லால் நேருவைவிட அதி புத்திசாலி என்கிற காரணத்தால் தமிழ்க் வழிக் கல்வி வேண்டாம் என்று இன்றைக்கு மக்களுக்கு அறிவுரை கூறிக் கொண்டிருக்கிறார்.

அவர் ஒரு வாதத்தை வைக்கிறார். அந்த வாதம்தான், தமிழகப் பள்ளிகளில் தமிழ் வளர்ந்தால் அந்தப் பள்ளிகள் எல்லாம் மத்திய **C.B.S.E.** முறைக்கு மாறிவிடும். அப்படி மாறி விட்டால் இந்தி வந்து விடும் என்று ஒரு வாதத்தைத் தெரிவித்திருக்கிறார். விஷயம் தெரியாமல் பேசுகின்ற அம்மையார் அவர்களுக்கு - ஐந்தாண்டு காலம் முதல்வராகப் பொறுப்பேற்றிருந்தவருக்கு - ஒன்று இந்த விஷயம் தெரிந்திருக்க வேண்டும், அல்லது தெரிந்தும் மக்களைக் குழப்ப வேண்டும்.

தமிழ் வழிக் கல்வி என்றால் அந்தப் பிள்ளைகள் எல்லாம் மத்திய சி.பி.எஸ்.ஈ. முறைக்கு மாறி விடுவார்களாம். அப்படி மத்திய சி.பி.எஸ்.ஈ பள்ளிகள் தமிழகத்திலே எவ்வளவு இருக்கின்றன என்றால் இருநூறுக்கும் குறைவாகத்தான் அந்தப் பள்ளிகள் இருக்கின்றன. அந்தப் பள்ளிகளிலே சென்று மற்ற பள்ளிகள் இணைய வேண்டுமென்றால், எந்தவொரு பள்ளியும் தமிழக அரசின் கல்வித் துறையின் அனுமதி இல்லாமல் சி.பி.எஸ்.ஈ. பள்ளியாக ஆக முடியாது

**- The Education Department of Tamil Nadu has to give the No Objection Certificate before the C.B.S.E. Schools can be started.**

இதுதான் நிலைமை. இந்த உண்மை நிலைமையை மக்களிடம் மறைத்துவிட்டு எல்லாப் பள்ளிகளும் சி.பி.எஸ்.ஈ. முறைக்கு மாறிவிடுவார்கள் என்று மக்களைக் குழப்புவது நியாயமல்ல.

நம்முடைய தலைவர்கள் எல்லாம் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல ஜப்பானில் முதல் வகுப்பிலேயிருந்து எட்டாம் வகுப்பு வரையிலே ஜப்பான் மொழியிலேதான் பயிற்று மொழி. ஒன்பதாம் வகுப்பிலிருந்து பள்ளி இறுதி வகுப்பு வரையிலே ஆங்கிலம் பயிற்று மொழி. ஜப்பான் நாட்டிலே ஜப்பான் மாணவர்கள் முன்னேறவில்லையா? ஜப்பான் நாடு வாழவில்லையா? ஜப்பான் நாட்டின் பொருளாதாரம் மற்ற நாடுகளுக்கெல்லாம் இன்றைக்கு வழிகாட்டியாக அமையவில்லையா? என்பதை தயவு செய்து நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இவைகள் எல்லாம் எதையாவது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி செய்வதை எதிர்த்தே தீர வேண்டும் என்கிற ஒரு நிலையை உருவாக்குவதற்காக செல்வி• ஜெயலலிதா கடைப்பிடிக்கின்ற முறையே அல்லாமல் வேறல்ல.

என்னுடைய அருமை நண்பரும் பா.ஜ.க.வின் மாநிலப் பொதுச் செயலாளருமான இல. கணேசன் பேசும்போது கோடரிக்காம்பு என்று குறிப்பிட்டார்கள். கோடரிக் காம்பு எதற்குப் பயன்படுகிறது? தன்னுடைய இனத்தையே வெட்டி வீழ்த்தப் பயன்படுகிறது என்று குறிப்பிட்டார்கள்.. ஆனால் நம்முடைய டாக்டர் இங்கே பேசும்போது அவர் நம்முடைய இனமே அல்ல - நம்மவரே அல்ல என்று குறிப்பிட்டார்கள்.

அவர் குறிப்பிட்டதை வேறு மாதிரியாக யாரும் எடுத்துக் கொள்ளக் கூடாது. நான் புரிந்து கொண்டதைச் சொல்கிறேன். தமிழ்நாட்டுக்காரர் அல்ல, அவர் பக்கத்து மாநிலத்துக்காரர், கர்நாடகத்தைச் சேர்ந்தவர் என்ற கருத்திலேதான் டாக்டர் அவர்கள் இங்கே சொன்னதாக நான் கருதுகிறேன். ஆனால் அவர்கள் இங்கே பேசும்போதே கேட்டார்களே, இந்தக் கருத்தை

கர்நாடகத்திலே போய், கன்னட மொழி பயிற்று மொழியாக இருக்கக் கூடாது என்று சொல்லிவிட்டு அந்த அம்மையார் தப்பித்து இங்கே வருவாரேயானால் அவருக்கு நான் வரவேற்பளிக்கக் காத்திருக்கிறேன். ஆந்திரத்திலே செல்லுபடி யாகுமா இந்த அறிவுரை? கேரளத்திலே கேட்பார்களா இந்த அறிவுரையை? உன்னுடைய தாய் மொழியிலே படிக்காதே என்று சொல்ல எவ்வளவு தைரியம் ஒருவருக்கு வர வேண்டும்? அதுவும் தமிழனாகப் பிறந்தவரைப் பார்த்து, தமிழா, நீ உன்னுடைய மொழியிலே படிக்க வேண்டாம் என்று கூறுவதா?

நாமென்ன ஆங்கிலமே கூடாதென்றா சொல்கிறோம்? அவ்வாறு கூறிய டாக்டர் ராமதாஸ் அவர்களாக நான் மாற கொஞ்ச காலமாகும். இப்போதே மாற என்னால் முடியாது.. ஏனென்றால் தமிழ் மாத்திரம்தான் தமிழ்நாட்டினுடைய மொழி என்று அவர் கூறியதைப் போன்ற ஒருகாலம் வரவேண்டு மேயானால் - அவர் மனதிற்குள் எதையோ

வைத்துக் கொண்டு சொல்கிறார் என்று கருதுகிறேன். தமிழ் நாடு தனி நாடாக இருந்தால்தான் அங்கே தமிழ் மாத்திரம் இருக்க முடியும். நாம் பக்கத்து மாநிலங்களோடு உறவாட, பக்கத்து நாடுகளோடு பேச, வியாபாரத்திலே ஈடுபட, “அப்போது, நான் தமிழிலே பேசுவேன், நீ வேண்டுமானால் மொழி பெயர்த்துக் கொள்'' என்று தைரியமாகச் சொல்லலாம்..

ஆனால் இப்போது நாம் இந்தியா என்கிற துணைக் கண்டத்திலே இருப்பவர்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை இந்திய இறையாண்மையை ஒப்புக்கொண்ட கழகம். பிரிவினையை விட்டுவிட்ட கழகம். தனித் தமிழ்நாடு, தனி திராவிட நாடு கோரிக்கையை விட்டு விட்ட கட்சிதான் திராவிட முன்னேற்றக் கழகம். ஆனால் டாக்டர் அவர்களுக்கு அப்படியொரு நப்பாசை இருக்குமோ தெரியாது. நான் இப்படி கூறுவதால் ஒரே மேடையில் கருணாநிதி ராமதாஸ் தகராறு என்று பத்திரிகைகளிலே போட்டுவிடக் கூடாது. (டாக்டர் ராமதாஸ் குறுக்கிட்டு தனக்கும் அப்படிப்பட்ட எண்ணம் இல்லை என்று தெரிவிக்கிறார்) தனி நாடாக இருக்க வேண்டுமென்ற எண்ணத்தில் சொல்லவில்லை என்று டாக்டர் அவர்களே தெரிவித்து விட்டார்கள். அதற்காக என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரே மொழிதான் இருக்க வேண்டுமென்று சொல்லும் போது சில சங்கடங்கள் இருக்கின்றன. ஆங்கிலம் அளவிற்கு தமிழ் வளரவில்லை என்று கூறுவதற்காக நான் வெட்கப்படு கிறேன். ஆனால் இலக்கிய வளம், இலக்கண வளம், காவிய வளம், காப்பிய வளம் என்ற எல்லா வளங்களும் நிறைந்து தொன்மைக் காலத்து மொழி என்கின்ற அந்தப் பெருமை அத்தனையும் கொண்டது தமிழ் என்றாலுங்கூட இன்றைக்கு தமிழுக்கு வர வேண்டிய அந்தப் பெருமை இன்னமும் வரவில்லை, இன்றைய நிலையிலே. அதனால்தான் ஆங்கிலத்தின் துணை நமக்குத் தேவைப்படுகிறது.

ஆங்கிலத்தை நடைவண்டியாகத்தான் பயன்படுத்திக் கொள்கிறோமே தவிர ஆங்கிலத்தையே கால்களாக வைத்துக் கொள்ள வேண்டுமென்று நாம் எண்ணவில்லை. ஆங்கிலத்தை மூக்குக் கண்ணாடியாகத்தான் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமே தவிர ஆங்கிலத்தையே இரண்டு கரு விழிகளாக வைத்துக் கொள்ள வேண்டுமென்று நாம் கருதவில்லை. தமிழ் தான் நம்முடைய விழிகள், தமிழ்தான் நடப்பதற்கு நமக்கு இருக்கின்ற கால்கள், தமிழ்தான் இயங்குவதற்காக நமக்கிருக் கின்ற கைகள். அதிலே எந்த விதமான வேறுபாடும் கிடையாது.. ஆங்கிலம் நமக்கு ஒத்தாசையாக, உதவியாக, இன்னும் சொல்லப்போனால் நமக்கு தொண்டாற்றுகின்ற ஒரு வேலைக்காரனாக, தொண்டனாக, தோழனாக ஆங்கிலம் இருக்கிற வரையிலே இருக்கட்டும் என்பதற்காகத்தான் ஆங்கிலத்தை நாம் அனுமதித்திருக்கிறோம்.

தமிழில் படி என்று சொல்கிறோம். தவறா? தமிழைப் படி என்பதற்கும் தமிழில் படி என்பதற்கும் உள்ள வேறுபாடு என்ன? தமிழைப் படி என்றால், தமிழைப் படிப்பதற்கு அனுமதி. தமிழில் படி என்றால் உலகத்தில் வளர்ந்து வருகின்ற விஞ்ஞான அறிவையெல்லாம், அறிவியல் விஷயங்களை யெல்லாம் நாட்டிற்கு இன்றைக்குத் தேவையான பல கருவிகளைச் செய்கிற அந்தச் செய்திகளை யெல்லாம் தமிழில் படிக்க வேண்டும். ஆங்கிலத்தைப் படிக்க வேண்டாமென்று சொல்லவில்லை. ஆங்கிலத்தைப் படி, ஆனால் ஆங்கிலத்தில் படிக்காதே (கைதட்டல்). இதுதான் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டிய மிக முக்கியமான ஒன்று. தமிழைப்படி, தமிழில் படி, ஆங்கிலதைப் படி, ஆங்கிலத்தில் படிக்காதே. அதுவும் எதுவரையில்? ஐந்தாம் வகுப்பு வரையிலே. அதற்குப் பிறகு ஆறாம் வகுப்பிலே படித்தால் என்ன?

நண்பர் இல.கணேசன் இங்கே குறிப்பிட்டதைப் போல - அவர் ஆறாம் வகுப்பு வரையிலே மாத்திரமல்ல, அதற்கு மேலும் பயிற்று மொழியாக தமிழிலே படித்தவர்தான். நானும் அப்படி படித்தவன்தான். பேரறிஞர் அண்ணா அவர்களும்

அப்படிப் படித்தவர்தான். இடையிலே கொஞ்சம் காலமாற்றம் ஏற்பட்டு அந்த மாற்றத்தின் காரணமாக நாம் மீண்டும் தமிழ் வழிக் கல்வி வேண்டும் என்ற ஒரு ஆணையைப் பிறப்பிக்க வேண்டிய அவசியம், இன்றியமையாமை தமிழகத்திலே தமிழக அரசுக்கு ஏற்பட்டது. அந்தக் கடமையைச் செய்திருக்கிறோம். அந்தக் கடமையைக் கண்டிக்கிறவர்கள் பாடம் பெற்றாக வேண்டும்.

அன்பிற்குரிய டாக்டர் பேசும்போது போயஸ் தோட்டத்துக்குச் சென்று தமிழ் புலவர்கள் எல்லாம் முற்றுகையிட வேண்டுமென்றார்கள். தமிழ்ப்புலவர்கள் தீர்மானித்துக் கொள்ள வேண்டியது இது. முற்றுகையிட வேண்டுமென்று டாக்டர் சொன்னது அந்த உணர்வை வெளிப்படுத்த வேண்டுமென்ற பொருளிலேதானே தவிர அவர் தூண்டி விட்டார் என்று நாளைக்கு யாரும் கதை கட்டக் கூடாது. ஆனால் நம்முடைய புலவர்களுக்கு அப்படிப்பட்ட வீரம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. (பலத்த சிரிப்பு) டாக்டர் சொன்னதற்கு மாறாக கருணாநிதி வீட்டிற்கு முன்னால் சென்று உண்ணாவிரதம் இருங்கள், முற்றுகையிடுங்கள் என்று சொன்னால் அதைச் செய்ய தமிழ்ப்புலவர்கள் தயாராக இருக்கிறார்கள். இதற்கெல்லாம் அவர்கள் தயாராவார்கள் என்று நான் கருதவில்லை.

அவர்கள் சொல்லிக் கொள்ளலாம். பெண் என்றால் பேயும் இரங்கும் என்று. (சிரிப்பு) நான் கேலிபாகவோ அல்லது டாக்டர் அவர்கள் சொன்னமாதிரி சீரியசாகவோ இதைச் சொல்லவில்லை.

தமிழ் மொழிக்கு இப்படி ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறதே என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். தமிழ் நாட்டிற்கு இப்படி ஒரு ஆபத்து ஏற்படலாமா? தமிழா, நீ தமிழில் படிக்காதே என்று சொல்லக்கூடிய ஒரு அறிக்கையை தமிழ் நாட்டிலே விடக்கூடிய அளவிற்கு தைரியம் இருக்கிறதென்றால், டாக்டர் சொன்னது மாதிரி,

குத்திப் பார்க்காதீர்கள், கோணி ஊசியால் குத்திப் பாருங்கள் என்று சொன்னார்களே, அது கூட முடியாது, நான் உட்பட சொல்கிறேன், கோணி ஊசி கூட அல்ல, கடப்பாறையால் குத்திப் பார்த்தால் கூட நமக்கு உணர்வு வராது. அந்த அளவிற்கு தமிழர்கள் இன்றைக்கு தாழ்ந்து விட்டார்கள் என்பதை நான் வெட்கத்தோடு சொல்லிக் கொள்கிறேன்.

இன்றைக்கு அறந்தாங்கியில் தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் தம்பி திருநாவுக்கரசு நிறுத்திய வேட்பாளருக்கு 70 ஆயிரம் வாக்குகள் கிடைக்கிறது, எதிர்த்து நிற்கின்ற ஜெயலலிதா கட்சிக்காரருக்கு 40 ஆயிரம் வாக்குகள் கிடைக்கிறது. நெல்லிக் குப்பத்திலே நமக்கு 60 ஆயிரம் வாக்கு கள் கிடைக்கிறது. ஜெயலலிதா நிறுத்திய வேட்பாளருக்கு 40 ஆயிரம் வாக்குகள் கிடைக்கிறதென்றால், அப்படிப்பட்ட 40 ஆயிரம் தமிழர்கள் இருக்கிறார்களே, கடப்பாறையால் இடித்தால் கூட உணர்ச்சி வராத 40 ஆயிரம் தமிழர்கள் இருக்கிறார்கள். அதனால் நாம் வெற்றி என்று கருதக் கூடாது. வெட்கப்பட வேண்டும் நாம். இதை நான் வெற்றியாகக் கருதவில்லை.

இப்படி ஒவ்வொரு தொகுதியிலும் 40 ஆயிரம் பேர் அவர்களை ஆதரிக்கக் கூடியவர்கள் இருக்கிறார்கள் என்றால் தமிழா, உனக்கு தமிழ் வேண்டாம் என்று சொல்கிறவர்களைப் பார்த்து, அவர்களுக்கு நேராக தலை குனிந்து, அம்மா வரவேற்கிறோம். அப்படிச் சொல்லு தாயே என்று சொல்கிறார்கள். நீ அல்லவா தெய்வம் என்று சொல்கிறவர்கள் அவர்கள்,

நான் ஒரு விளம்பரம் பார்த்தேன். "இந்தியாவின் விடுதலைக்கு வெளிச்சம் போட்ட அம்மையே!" என்று. உண்மையில் எந்த அம்மை இந்தியாவின் விடுதலைக்கு வெளிச்சம் போட்டது? சரோஜினி தேவியா? கவிக்குயில் சரோஜினி தேவியா? அல்லது இளமைப் பருவத்திலே வானரப் படை நடத்திய இந்திரா காந்தி அம்மையாரா?

தில்லையாடி வள்ளியம்மையாரா ? இந்தியாவின் விடுதலைக்கு வெளிச்சம் போட்ட தாயே நீ வாழ்க என்று சொல்கின்ற அளவிற்கு இன்னமும் தமிழன் தன்னுடைய மானத்தை மறந்து கிடப்பதை பத்திரிகைகளிலே பார்க்கிறோம். அதைப் பத்திரிகைக் காரர்களும் விளம்பரம் வருகிறதே என்பதற்காக பெரிதாகப் போடுகிறார்கள். அப்படிப்பட்ட ஒரு மாநிலத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை மறந்து விடக் கூடாது. இருந்தாலும் இந்த உணர்வு இன்னமும் மங்கி மங்கி மங்கி மாண்டு மடிந்து போய்விடக் கூடாது என்பதற்காகத்தான் இருக்கின்ற உணர்வை மேலும் தட்டியெழுப்புவதற்காகத்தான் இது போன்ற கூட்டங்களில் நாங்கள் சந்தித்திருக்கிறோம்.

இந்த மொழிப் போராட்டம் எந்தக் காலந்தொட்டு நடைபெறுகிறது ? இங்கே நம்முடைய திருப்பூர் அல்தாப் பேசினார். அவருடைய தந்தை அண்ணன் திருப்பூர் மொய்தீனும் நானும் இந்தியை எதிர்த்து ஒரே மேடையிலே பேசியவர்கள். சி.பி.சிற்றரசு, திருப்பூர் மொய்தீன் இருவரும் ஒரே மேடையில் இரட்டையர்களாக அந்தக் காலத்திலே முழங்குவார்கள். திருப்பூர் மொய்தீனின் வீர முழக்கத்தை அன்றைக்கு நான் கேட்டிருக்கிறேன்.

அதே முழக்கம் இன்றைக்கு அவருடைய மைந்தனுடைய பேச்சின் மூலமாக என்னால் கேட்க முடிந்தது. மொழிப் போராட்டத்தின் வரலாறு தலைமுறை தலைமுறையாக நீண்டு கொண்டே போகிறது. இந்த வரலாற்றை உணராத விஷம சக்திகள் வாலாட்டிப் பார்க்கின்றன என்றால் அந்த வால் ஒட்ட நறுக்கப்பட வேண்டாமா என்ற கேள்வியை மாத்திரம் உங்களிடத்திலே எழுப்பி விடைபெறுகிறேன்.

✤ ✤ ✤ ✤ ✤ ✤